**<u>O.S.No. 260/2018</u>**

**<u>DW1 :</u>** குமரேசன் தேதி 24.3.2026

<u>பிவாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

வாதி சுதா என் மூத்த சகோதரி. குடும்ப சொத்துகளில் நான் என் அம்மா என் அண்ணன் ஆகியோர் வாதிக்கு ஏதேனும் பத்திரம் எழுதி கொடுத்திருக்கிறோமா என்றால் 2014 ல் தானசெட்டில்மென்ட் பத்திரம் எழுதி கொடுத்திருக்கிறோம். அந்த சொத்தின் சர்வே எண். 385 விஸ்தீரணம் 6355 சதுரடி. ப க ச எண்.306. என்னிடம் காண்பிக்கபடும் வாசாஆ 1 என் சகோதரி வாதிக்கு நாங்கள் எழுதி கொடுத்த தானசெட்டில்மென்ட் பத்திரம் என்றால் சரிதான். மேற்படி தானசெட்டில்மென்ட் பத்திரத்தை வாதி ஏற்று கொண்டார். வாசாஆ 1 தேதியிலிருந்து வாதி சுதா தான் அந்த சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வந்தார் என்றால் சரிதான். தானசெட்டில்மென்ட் பத்திரத்தின் அடிப்படையில் வருவாய் துறை ஆவணங்களில் வாதி பெயர் மாற்றம் செய்து கொண்டார் என்றால் சரிதான். தானசெட்டில்மென்ட் பத்திரம் அசல் ஆவணம் வாதி வசம் தான் இருந்தது என்றால் சரிதான். பின்னிட்டு வாதி எனக்கு 2017 ல் அதே சொத்தை பொறுத்து தானசெட்டில்மென்ட் எழுதி கொடுத்தார். அது வாசாஆ 2. வாசாஆ 2 வாதி எனக்கு எழுதி கொடுக்கும் போது வாதியின் கணவர் சதீஷ்குமார் மற்றும் கல்யாண்குமார் ஆகியோர் சாட்சி கையெழுத்திட்டார்கள். வாசாஆ 2 ஐ எழுதியவர் பத்திர எழுத்தர் வாசுதேவன். வாசாஆ 2 முறையாக பதிவு செய்யப்பட்ட ஆவணம். வாசாஆ 2 க்கான மூல பத்திரம் வாசாஆ 1 ஐ வாதி என்னிடம் ஒப்படைத்துவிட்டார். பின்னிட்டு என் பெயரில் பெயர் மாற்றம் செய்து கொண்டேனா என்றால் பட்டா என் பெயரில் மாற்றி கொண்டேன். பின்னிட்டு வாசாஆ 2 ன் படி எனக்கு பாத்தியப்பட்ட சொத்தை நான் என் மனைவி பெயருக்கு தானசெட்டில்மென்ட் பத்திரம் எழுதி கொடுத்துவிட்டேன். அது பிவாசாஆ 1. பிவாசாஆ 1 ன் படி என் மனைவிக்கு

5350 சதுரடி எழுதி கொடுத்தேன். மொத்தம் 6350 சதுரடியில் 1000 சதுரடி பஞ்சாயத்து வண்டி பாதையாக இருந்ததில் அதை தெரியாமல் என் மூதாதையர் பத்திரத்தில் எழுதி கொண்டனர். வண்டி பாதை போக மீதி உள்ள 5350 சதுரடியை நான் என் மனைவிக்கு எழுதி கொடுத்தேன். என் மனைவி அந்த தேதியிலேயே சுவாதீனம் பெற்று கொண்டார். பின்னிட்டு என் மனைவி பிழை திருத்தல் பத்திரமாக ச எண் 385/1 ,2 ,3, 4 ,5 எழுதி கொண்டார். பின்னிட்டு வருவாய் துறை ஆவணங்களில் என் மனைவி பெயருக்கு மாற்றம் ஆனது. அந்த சொத்தை என் மனைவியிடம் இருந்து 4ம் பிரதிவாதி சாந்தலிங்கம் கிரையம் பெற்றார். அந்த கிரைய தொகை ரூ.26,93,000/- வங்கி பரிவர்த்தனை மூலமாக என் மனைவி பெற்று கொண்டார் என்றால் சரிதான். அது பிவாசாஆ2. அதில் நானும் சாட்சியாக உள்ளேன். பிவாசாஆ 2 தேதியிலிருந்து 4 ம் பிரதிவாதி அனுபவத்தில் இருந்து வருகிறார். பிவாசாஆ 2 ன் படி காலியிடமாக கிரையம் கொடுக்கப்பட்டது. பின்னிட்டு 4ம் பிரதிவாதி 3 மாடி கட்டிடம் கட்டியுள்ளார். என் அக்கா சுதா 8 ம் வகுப்பு வரை படித்திருக்கிறார். அவருக்கு 2001 ல் திருமணம் ஆனது. அப்போது என் அப்பா உயிருடன் இல்லை. என் அக்காவின் கணவர் சதீஷ்குமார் விவசாயம் செய்தார். 2011 - 2016 வரை ஊராட்சி மன்ற தலைவராகவும் இருந்தார். கேரளா பாலக்காட்டில் 2 பேருந்து வைத்திருந்தார். அவருடைய வசதி தெரிந்து தான் என் அக்காவை திருமணம் செய்து கொடுத்தோம். அவர் இறக்கும் வரை என் அக்காவுடன் சுமூகமான உறவில் தான் இருந்தார். 4ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தில் எனக்கோ என் அக்காவிற்கோ என் மனைவிக்கோ எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரிதான்.